நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

திருவாரூர்

**Cr.M.P. No.5189/2023**
**in**
**STC 290/2024**

**2024**-ம் ஆண்டு **ஜூலை மாதம் 11 -ம்** நாள் புகார்தாரர் தரப்பில் சாட்சி **பு..சா.1** -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெகதீஸ்வரன் | வயது | 33/2024 |
| தகப்பனார் பெயர் | கிருஷ்ணமூர்த்தி | ஜாதி | |
| தொழில் | வசூல் மேலாளர் | மதம் | |
| ஊர் | திருவாரூர் | தாலுக்கா | |

**முதல் விசாரணை** :

இவ்வழக்கில் புகார்தாரர் நிறுவனத்தில் அதிகாரம் பெற்ற முகவர் மற்றும் வசூல் மேலாளர் ஆவேன். வழக்கு விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியும், என்னிடம் காண்பிக்கப்படும் முதல் விசாரணை பிரமாணவாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். என்னிடம் காண்பிக்கப்படும் முதல் விசாரணை பிரமாணவாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டதுதான். எதிரி மீது காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். புகார்தாரர் தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். எதிரியின் **கடன் கணக்கு விபர அறிக்கை பு.சா.ஆ.1 ஆகும்.** எதிரி புகார்தாரர் நிறுவனத்திற்கு வழங்கிய 29.03.2023 ம் தேதியிட்ட **ரூ.1,30,000/-ற்**கான காசோலை அசல் **பு.சா.ஆ.2 ஆக ஆகும்.** 31.03.2023 ம் தேதியன்று எதிரி வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்ற காரணத்திற்காக காசோலை திருப்பப்பட்டதற்கான **வங்கி குறிப்பாணை பு.சா.ஆ.3 ஆகும்.** 21.04.2023 ம் தேதியன்று தொகை கேட்டு புகார்தாரர் நிறுவன வழக்கறிஞர் மூலமாக எதிரிக்கு அனுப்பப்பட்ட **வழக்கறிஞர் அறிவிப்பு நகல் பு.சா.ஆ 4 ஆகும்.** எதிரிக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பு திருப்பப்பட்டதற்கான **அஞ்சல் உறை பு.சா.ஆ.5 ஆகும்.** புகார்தாரர் நிறுவனத்தால் வழங்கப்பட்ட **பொது அதிகார ஆவணம் உண்மை நகல் பு.சா.ஆ.6 ஆகும்.** எதிரி மோசடியாக எங்களது நிறுவனத்திற்கு காசோலை கொடுத்து ஏமாற்றியதால் அவர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன். புகார்படி நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன்.

**சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஏற்கப்பட்டது.**

**ஒம்/- பி. மகேந்திரவர்மா,**
**நீதித்துறை நடுவர்,**
**திருவாரூர்.**